பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 11 2025 MONDAY 12 40 PM
ஆகாஷ்வாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. சவுதி அரேபியாவில் உம்ரா புனித யாத்திரையின்போது, மெக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற பேருந்து மீது, டீசல் டேங்கர் லாரி மோதி ஏற்பட்ட தீ விபத்தில், 42 இந்தியர்கள் உயிரிழந்தனர்.
2. பீகார் மாநில முதலமைச்சராக திரு. நிதிஷ்குமார், 10வது முறையாக வரும் 20ஆம் தேதி பதவியேற்கவுள்ளார்.
3. அண்டை நாடுகள் தீவிரவாதத்தை ஆதரிப்பது கவலை அளிப்பதாக முப்படைகளின் தலைமைத் தளபதி ஜென்ரல் அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.
4. வங்கக்கடலில் ஏற்பட்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, தமிழக கடலோரப் பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. Deaflympic போட்டியில் இந்தியாவின் Abinav Deshwal வெள்ளிப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<

சவுதி அரேபியாவில் உம்ரா புனித யாத்திரையின்போது, மெக்காவிலிருந்து மதினாவுக்குச் சென்ற பேருந்து மீது, டீசல் டேங்கர் லாரி மோதி ஏற்பட்ட தீ விபத்தில், 42 இந்தியர்கள் உயிரிழந்தனர்.

இவர்களில் பெரும்பாலானோர் தெலங்கானா மாநிலம், ஹைதராபாதைச் சேர்ந்தவர்கள் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தில் சிக்கியவர்கள் பற்றிய தகவல்களை அவர்களது உறவினர்கள் அறிந்து கொள்ள ஏதுவாக ஜெட்டாவில் உள்ள இந்திய துணைத் தூதரகத்தில் சிறப்பு கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பான சமூகவலைதளப் பதிவில், விபத்தில் காயமடைந்தவர்கள் விரைவில் நலம்பெற பிரார்த்திப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு ரியாதில் உள்ள இந்திய தூதரகத்தின் மூலமாகவும், ஜெட்டாவில் உள்ள துணைத் தூதரகத்தின் மூலமாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் கூறியுள்ளார்.

>>>>>><<<<<

இதுதொடர்பாக சவுதி அரேபியாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், பாதிக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு தேவையான உதவிகளை, ரியாத் மற்றும் ஜெட்டாவில் உள்ள இந்திய தூதரகங்கள் வழங்கி வருவதாக கூறியுள்ளார்.

இந்த சம்பவத்திற்கு தெலங்கானா முதலமைச்சர் திரு. ரேவந்த் ரெட்டி ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, மாநில தலைமைச் செயலர் மற்றும் காவல்துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட அவர், ஹைதராபாத் தலைமைச்செயலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<

வடக்கு மண்டல கவுன்சில் கூட்டம் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தலைமையில் ஹரியானா மாநிலம், ஃபரிதாபாதில் தற்போது நடைபெற்று வருகிறது.

இக்கூட்டத்தில் ராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, பஞ்சாப் முதலமைச்சர் திரு. பகவந்த் மான், ஹரியானா முதலமைச்சர் திரு. Nayab Singh, தில்லி முதலமைச்சர் திருமதி. ரேகா குப்தா, ஜம்மு கஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

>>>>>><<<<<

*அமெரிக்காவிலிருந்து ஆண்டுக்கு 22 லட்சம் டன் சமையல் எரிவாயு இறக்குமதி செய்ய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.*

*சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பொதுமக்களுக்கு குறைந்த விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை வழங்குவதற்காக உலக நாடுகளிலிருந்து சமையல் எரிவாயு இறக்குமதி செய்து வருவதாக கூறியுள்ளார்.*

*இந்திய எண்ணெய் கழகம், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் உள்ளிட்ட எண்ணெய் நிறுவனங்களின் அலுவலர்கள், அமெரிக்காவில் உள்ள எண்ணெய் உற்பத்தி செய்யும் நிறுவன அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, மக்களுக்கு மிக குறைந்த விலையில் சமையல் எரிவாயு சிலிண்டர்களை வழங்கி வருவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

*உலக அளவில் சமையல் எரிவாயுவின் விலை 60 சதவீதம் அதிகரித்த போதிலும், உஜ்வாலா திட்டத்தின் கீழ், சமையல் எரிவாயு சிலிண்டர்கள் 500 ரூபாய் முதல் 550 ரூபாய் வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*இதன்மூலம் அரசுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், இதற்கான நிதிச்சுமை சமையல் எரிவாயு பயன்படுத்தும் மக்கள் மீது விதிக்கப்படவில்லை என்று திரு.ஹர்தீப் சிங் புரி கூறியுள்ளார்.*

*>>>>>><<<<<*

*சுதந்திரப் போராட்ட வீரர் லாலா லஜபதிராயின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, சமூகவலைதளத்தில் விடுத்துள்ள செய்தியில், லாலா லஜபதிராயின் புரட்சிகரமான சிந்தனைகளுடன், விவசாயிகள் மற்றும் இளைஞர்களை ஒருங்கிணைத்து சுதந்திரத்திற்காக போராடியதையும் நினைவுகூர்ந்தார்.*

*>>>>>><<<<<*

*அண்டை நாடுகள் தீவிரவாதத்தை ஆதரிப்பது கவலை அளிப்பதாக முப்படைகளின் தலைமைத் தளபதி ஜென்ரல் அனில் சவுகான் தெரிவித்துள்ளார்.*

*புதுதில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நமது நாட்டின் வளர்ச்சிக்கு எதிராக செயல்படும் சக்திகளுக்கு எதிராக தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.*

*சீர்திருத்தங்களின் ஆண்டு என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் கூறியதை சுட்டிக்காட்டிய ஜென்ரல் அனில் சவுகான், சீர்திருத்தங்களுடன் மாற்றங்களை கொண்டு வருவதே முப்படைகளின் நோக்கம் என்று தெரிவித்தார்.*

*>>>>>><<<<<*

*தமிழகத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி வரும் 19ஆம் தேதி கோவையில் தென்னிந்திய இயற்கை விவசாய உச்சி மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.*

*மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், நாடு முழுவதிலுமிருந்து விவசாய துறையைச் சேர்ந்த வல்லுநர்களும், விஞ்ஞானிகளும் பங்கேற்கின்றனர்.*

*சிறப்பு வேளாண் கண்காட்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.*

*பிரதமரின் வருகையை ஒட்டி, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட – ஹரிகரன் 22 செசண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*தமிழகத்தின், சென்னையின் முக்கிய குடிநீர் ஆதாரமாக விளங்கும் பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து 3 ஆயிரம் கனஅடி உபரிநீர் கொசஸ்தலை ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது.*

*இதன் காரணமாக, அந்த ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*(வாய்ஸ் பைட – தனசேகரன் 48 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*பீகார் மாநில முதலமைச்சராக திரு. நிதிஷ்குமார் 10வது முறையாக பதவியேற்கவுள்ளார்.*

*பதவியேற்பு நிகழ்ச்சி வரும் 20ஆம் தேதி, பாட்னாவில் உள்ள காந்தி மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*பதவியேற்பு விழாவில் பிரதமர் திரு.நரேந்திர மோடி கலந்து கொள்ளவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.*

*>>>>>><<<<<*

*வங்கக்கடலின் தென்மேற்கு பகுதியில் இலங்கைக்கு அப்பால் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக, வரும் 24ஆம் தேதிவரை கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*அடுத்த 24 மணி நேரத்தில், தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலைஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.*

*(சவுண்ட் பைட – செந்தாமரை 40 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<*

*Deaflympic போட்டியில் இந்தியாவின் Abinav Deshwal வெள்ளிப்பதக்கம் வென்றார்.*

*ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் 10 மீட்டர் ஏர்ரைபில் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*